யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | இந்து சமயம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 01 முதல் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததை இனங்கண்டு அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.

01) (1) சிவராத்திரி புராணம் (2) திருவிளையாடல் புராணம் (3) கனகி புராணம்
(4) திருச்செந்தூர் புராணம் (5) திருத்தொண்டர் புராணம்

02) (1) நாச்சியார் திருமொழி (2) பெருமாள் திருமொழி (3) பெரிய திருமொழி
(4) வேதாந்த சங்கிரகம் (5) திருவாய் மொழி

03) (1) பெரிய தம்பிரான் வழிபாடு (2) முனியப்பர் வழிபாடு (3) மதுரை வீரன் வழிபாடு
(4) முருக வழிபாடு (5) ஐயனார் வழிபாடு

04) (1) சுக்கிர நிதி (2) மனுதர்ம சாஸ்திரம் (3) அர்த்த சாஸ்திரம்
(4) நாரதர்ஸ்மிருதி (5) திருக்குறள்

05) (1) காரணம் (2) காமிகம் (3) நரசிம்மம்
(4) அசிதம் (5) சுப்பிரவேதம்

❖ 06 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியில் உள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

agaram.lk

06) யாழ்நூல் - விபுலானந்த அடிகள்
பெரிய புராண வசனம் - ஆறுமுகநாவலர்
சிவஞான சித்தியார் - மெய்கண்டார்
திருமந்திரம் - திருமூலர்
சிலப்பதிகாரம் - உமாபதிச் சிவாசாரியார்

07) சரசோதிமாலை - போசராத பண்டிதர்
இரகுவம்சம் - வித்துவ சிரோன்மணி ந.ச பொன்னம்பலப்பிள்ளை
கதிரைவேலன் கோவை - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்
பிள்ளையார் புராணம் - புலோலி வைத்திலிங்க தேசிகர்

08) சங்கரர் - கேவலாத்துவைதம்
இராமானுஜர் - விசிட்டாத்வைதம்
மத்துவம் - துவைதம்
வீரசைவர் - சக்தி விசிட்டாத்வைதம்
மெய்கண்டார் - சிவஞானசித்தியார்

09) பிரகிருதி - சாங்கியம்
அவித்தை - வேதாங்கம்
ஆணவம் - சைவசித்தாந்தம்
திவ்வியதேசம் - வைணவம்
தருமபூதஞானம் - பௌத்தம்



Scanned with CamScanner

10) வீரபத்திரர் விரதம் - சித்திரைத் திங்கள் பரணிநாள்
சக்தி விரதம் - ஐப்பசித் திங்கள் உத்தர நாள்
சிவராத்திரி விரதம் - மாசித் திங்கள் வளர்பிறைச் சதுர்த்தி
விநாயகர் சஸ்டி - கார்த்திகைத் திங்கள் தேய்பிறைப் பிரதமை
கந்த சஸ்டி - ஐப்பசித் திங்கள் வளர்பிறைப் பிரதமை

❖ 11 முதல் 15 வரையுள்ள வினாக்களில் 'அ' , 'ஆ' எனும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலுடன் ஏதோ ஒரு விதத்தில் பொருத்தமானவை. 'அ' நிரலில் உள்ளவற்றை 'ஆ' நிரலுடன் பொருத்தும் போது 5 சேர்மானங்களுள் ஒன்று பொருத்தமாக அமையும். அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் குறிப்பிடுக.

11)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1) ராஜா தர்மம் | A - தைத்திரிய பிராமணம் |
| 2) மனுவந்தரம் | B - நம்மாழ்வார் |
| 3) கிருஸ்ணயசுர் வேதம் | C - பிரமம் இரண்டற்றது |
| 4) திருவிருத்தம் | D - மகாபாரதம் |
| 5) சாந்தோக்கிய உபநிடதம் | E - பஞ்சலட்சணம் |

(1) BACED (2) CDAEB (3) ECDAB (4) CEBAD (5) DEABC

12)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1) அஜாத வாதம் | A - சமணர் |
| 2) ஏகான்ம வாதம் | B - பௌத்தர் |
| 3) சற்காரிய வாதம் | C - சாக்கியர் |
| 4) சூனிய வாதம் | D - சங்கரர் |
| 5) அனேகான்ம வாதம் | E - கௌடபாதர் |

(1) ABDEC (2) BCEDA (3) CDEBA (4) DECBA (5) EDCBA

13)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1) வைதிகம் | A - பகவானுக்கு மங்களம் ஏற்பட வேண்டும் என்று போற்றும் பாடல் |
| 2) ஆறெழுதது மந்திரம் | B - வேத மரபு |
| 3) மங்கள சாசனம் | C - பூசையின் போது மாலை சாத்துதல் |
| 4) புஸ்பதானம் | D - கோயிலுக்கு தொண்டு செய்பவர்கள் |
| 5) தேவரடியார் | E - ஓம் சிவாயநம |

(1) ADBCE (2) BEACD (3) CABED (4) DBACE (5) EABCD

14)

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1) சாலோகமுத்தி | A - மாணிக்கவாசகர் |
| 2) சாமீபமுத்தி | B - ஜீவன்முத்தர் |
| 3) ஜீவன்முத்தி | C - திருநாவுக்கரசர் |
| 4) சாருபமுத்தி | D - சுந்தரமூர்த்திநாயனார் |
| 5) சாயுச்சியமுத்தி | E - திருஞானசம்பந்தர் |

(1) ABCDE (2) CBADE (3) CDEAB (4) CEBDA (5) EDCBA

agaram.lk



Scanned with CamScanner

| | 'அ' | | 'ஆ' |
|---|---|---|---|
| 15) 1) | திருக்களிற்றுப்படியார் | A - | 100 வெண்பாக்கள் கொண்ட சித்தாந்த சார்பு நூல் |
| 2) | சிவஞான போதம் | B - | சிவஞானபோதத்தின் சார்பு நூல் என்பர். 100 விருத்தப் பாக்களால் ஆனது |
| 3) | சிவஞானசித்தியார் | C - | சித்தாந்த நூல்களில் முதல்நூல் 12 சூத்திரங்களையும் 81 வெண்பாக்களையும் கொண்டது. |
| 4) | சிவப்பிரகாசம் | D - | சிவஞானபோதத்தின் வழிநூல், சிவஞானபோதம் கூறும் 12 சூத்திரப் பொருளை 12 அதிகாரத்தில் விளக்குவது |
| 5) | திருவருட்பயன் | E - | சிவஞானபோதத்திற்கு முற்பட்ட நூல் 100 வெண்பாக்களைக் கொண்டது. |

(1) AEBCD (2) BACED (3) CDABE (4) DAEBC (5) ECDBA

❖ 16 முதல் 20 வரையான இலக்கங்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுடன் ஒருவகையில் பொருத்தமானவற்றை i, ii, iii, iv நிரல்களில் இருந்து தெரிவு செய்து சரியான விடையின் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| A<br>பரம் | F<br>ஸ்ரீபாஸ்யம் | K<br>மாயை | P<br>அர்ச்சை |
| B<br>ஏகமுகலிங்கம் | G<br>அக்கினி | L<br>நந்தி வழிபாடு | Q<br>சித்சக்தி |
| C<br>தத்துவத்திரயம் | H<br>வியூகம் | M<br>அவதாரம் | R<br>பிரபத்தி |
| D<br>தேவதூதன் | I<br>உலகம் | N<br>தர்மபூதநானம் | S<br>புரோகிதன் |
| E<br>இறைவன் | J<br>பூமராசிவன் கோவில் | O<br>ராஜசூயம் | T<br>மார்க்கண்டேயப் புராணத் தோற்றம் |

agaram.lk

16) வேதகால யாகங்களுடன் தொடர்புடைய பகுதி
(i) B H M S (ii) D G O S (iii) CFMJ
(iv) D G L S (v) E H O P

17) வைணவ நெறியோடு தொடர்புடைய பகுதி
(i) C G M S (ii) B F N R (iii) A H M P
(iv) D G L R (v) E H O T

18) குப்தர்கால சிவவழிபாட்டுடன் தொடர்புடையது
(i) A G O R (ii) C H M R (iii) D I O S
(iv) B J L T (v) E F L Q

19) இராமானுயரது வேதாந்தத்துடன் தொடர்புடைய பகுதி
(i) C F N R (ii) A E M T (iii) D H N R
(iv) B I M P (v) C I L Q

20) சைவ சித்தாந்தம் கூறும் உலகப் படைப்போடு தொடர்புடைய பகுதி
(i) A J L R (ii) D H M T (iii) E G N Q
(iv) B J K S (v) E I K Q



Scanned with CamScanner

❖ 21 முதல் 25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ள. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.

21) உபநிடதமும் தத்துவச் சிந்தனையும்

(1) பிரபஞ்ச உண்மையை விளக்குபவை உபநிடதமாகும்.

(2) ஆன்மாவினதும் இறைவனதும் இருப்புப் பற்றி உபநிடதம் கூறுகின்றது.

(3) இந்து தத்துவம் உபநிடத மகா வாக்கியங்களினது விளக்கமாகும்.

(4) சமண பௌத்த தத்துவங்கள் உபநிடத சிந்தனையின் மேல் கட்டி எழுப்பப்பட்டமை.

(5) இந்துக்களின் வாழ்வியல் சிந்தனைகளை எடுத்துக்கூறும் நூல் உபநிடதமாகும்.

22) மதமும் சின்னமும்

(1) மதம் என்பது முழுமுதற் பொருளான இறைவன் ஒருவனை அடிப்படையாகக் கொண்டது.

(2) சைவசமயத்தின் முழுமுதல் பொருள் சிவபெருமான்

(3) சைவர்கள் தமது சமயத்தின் குறியீடாக அணிவது சிவசின்னங்களேயாகும்.

(4) சிவசின்னங்கள், விபூதி உருத்திராக்கம் என்பனவாகும்.

(5) தீட்சை பக்தியையும் முத்தியையும் தரவல்லது.

23) நாட்டியமும் அழகுணர்ச்சியும்

(1) கலைகள் இறைவனின் படைப்பு என்பது நம்பிக்கை

(2) கதகளி, மணிப்புரி, பரதநாட்டியம் முதலானவை இந்திய நாட்டிய மரபில் சிறப்பானவை

(3) கரகாட்டம், காவடி முதலான நாட்டார் கலைகளும் கலைமரபு என்ற வகையில் இதனுள் அடங்கும்.

(4) இந்துசமய கலைமரபுகள் அழகுணர்ச்சியையும் பக்தியையும் தரவல்லன.

(5) இந்திய நாட்டின் கலை மரபின் உயர் எல்லையைக் காட்டி நிற்பதாக அமைவது தாண்டவ நாட்டிய சிற்ப வடிவே ஆகும்.

24) சாதனையும் முத்தியும்

(1) இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம் என்பார் நாவலர்

(2) இறைவனை வழிபட்டு முத்தி பெற சைவம் நால்வகைச் சாதனங்களின் அவசியம் பற்றிக் கூறுகின்றது.

(3) சாதனைகள் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை மார்க்கங்களாகும்.

(4) வேதாந்திகள் இறைவனை அடைவதற்கு ஞானத்தையும் பிரபத்தியையும் வற்புறுத்துவர்

(5) தாழ் + தலை என்பது தாடலை என்பது போல் இரண்டு அற்ற தன்மை உடையதாய் இறையுடன் ஆன்மா உடனாதலே முத்தி என்பர்.

25) இரண்டாம் சிவாலயம் - பொலன்னறுவை

(1) பொலன்னறுவையில் சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களுள் மிகச் சிறப்பு வாய்ந்த ஆலயம் இரண்டாம் சிவ தேவாலயம்

(2) இவ்வாலயத்தினை வானவன் மாதேவிச்சரம் என்றும் அழைப்பர்

(3) இவ்வாலயம் அதிட்டானம் முதல் விமானம் வரையுள்ள ஆலயத்துக்குரிய முழு வடிவமும் கொண்டது

(4) இதன் வளாகத்தில் பிள்ளையார் கோவில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது

(5) வானவன் மாதேவிச்சரத்தின் அமைப்பும் அழகும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் அழகிற்கும் அமைப்புக்கும் ஒப்பானது.



agaram.lk
Scanned with CamScanner

❖ சைவ சமயத்தின் வளர்ச்சிப் பின்னணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 26 - 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடை தருக.

தஞ்சைப் பெருங்கோவில்

A - சோழர்கால கட்டடக்கலையின் உன்னத படைப்பாக அமைவது தஞ்சைப் பெருங்கோவில்

B - இக்கோவில் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்டது

C - தென்திசை மேரு, பெரிய கோயில், பெருவுடையார் கோவில் என்பன இதன் சிறப்புப் பெயர்களாகும்.

D - இக்கோவில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலான ஆறு பகுதிகளைக் கொண்டது.

E - சோழர்களின் பல்துறை சார்ந்த வெற்றியின் குறியீடாக அமைவதே இக்கோயிலாகும்.

F - இக்கோயிலின் விமானம் 216 அடி உயரத்தைக் கொண்டது.

26) சோழர்காலக் கட்டடக் கலையின் சிறப்புக்கும் சாதனைக்கும் சான்றாக அமையும் சேர்மானம்

(1) ABD (2) ACE (3) BCD (4) CDE (5) DEF

27) தஞ்சைப் பெருங்கோவிலின் அமைப்புக்களைக் குறிக்கும் சேர்மானம்

(1) ADE (2) AEF (3) BDF (4) CDE (5) DEF

❖ நாவலர் சமயத் தொண்டர். அவர் சைவசமய வளர்ச்சியின் பொருட்டுப் பல்துறை அறிவினை ஆற்றியுள்ளார். அவையாவன

A - ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவினார்.

B - சமய உண்மைகளைப் புரிந்து கொள்ளும் வகையிலும் சமய, சமூக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் சுப்பிரபோதம் சைவ தூஷனப் பரிகாரம் முதலான நூல்களை எழுதி வெளியிட்டார்.

C - சமய ஒழுகலாறின் பொருட்டு நிலையாமை, பிறர் மனை நினையாமை முதலியன பற்றி தமிழில் பிரசங்கம் செய்தார்.

D - தமிழ்மொழியில் கலைத்திட்டத்தை உருவாக்கியும் பாலபாடங்கள் முதலான நூல்களை எழுதியும் நன்நூல் விருத்தியுரை முதலான நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டார்.

E - சமூகத்தின் பொருளாதார விருத்தி கருதி யாழ்ப்பாண மட்டக்களப்பு வேளாண்மைச் சங்கம் நிறுவியும் கோதாரி நோய் ஏற்பட்ட போது சமூக வேறுபாடு கருதாது கஞ்சித் தொட்டித் தாணம் செய்தார்.

F - இறைவனுக்கு பிதிரியுடைய அருட்பாக்கள் அடங்கிய திருவருட்டா திரட்டு அருள்பா, பதினாறாம் திருமுறை முதலான நூல்களைப் பதிப்பித்தார்.

28) நாவலரின் சமயப் பணிகளில் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கம்

(1) AB (2) CD (3) CF (4) DE (5) EF

29) நாவலரின் கல்விப் பணிகளை விளக்கி நிற்கும் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கம்

(1) AC (2) AD (3) CD (4) DE (5) EF

30) நாவலரின் சமூக நோக்கை எடுத்துக் காட்டும் பொருத்தமான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவு செய்க.

(1) AB (2) BE (2) CF (4) DF (5) EF



agaram.lk
Scanned with CamScanner

❖ 31 தொடக்கம் 45 வரையான வினாக்களுக்கு அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) நாட்டார் வழக்காற்று வகைமைகளுள் மூன்று சடங்கியல் நிகழ் கலைகள் அடங்கும் தொகுதி
(1) கனியான் கூத்து, காமன் கூத்து, பொன்னர் சங்கர் கூத்து
(2) காத்தவராயன் கூத்து, நையாண்டி மேளம், நொண்டி நாடகம்
(3) தப்பாட்டம், கோலாட்டம், பறை மேளக்கூத்து
(4) ஒயிலாட்டம், கணியான் கூத்து, தப்பாட்டம்
(5) தேவராட்டம், இராமாயணம், மோகினி ஆட்டம்

32) ஈழநாட்டில் மகாபாரதத்தின் கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டுத் தெய்வம்
(1) சீதை அம்மன்
(2) பேய்ச்சி அம்மன்
(3) திரௌபதை அம்மன்
(4) மாரியம்மன்
(5) கண்ணகி அம்மன்

33) சிவமூர்த்தம் நான்கும் அடங்கும் தொகுதி
(1) இலிங்கோற்பவர், சதாசிவம், சோமஸ்கந்தம், கங்காதரர்
(2) சுகாசனர், திரிபுரத்தகர், பரமசிவன், கிராதரர்
(3) குருமூர்த்தி, நீலகண்டன், ஏகபாதர், சந்திரசேகரர்
(4) பைரவர், தம்பிரான், வீரபத்திரர், பிச்சாடகர்
(5) சங்கரன், நிருத்தர், நடராசர், கலாதரர்

34) 19ம் நூற்றாண்டில் எழுந்த சைவசமயம் சார்ந்த மூன்று பத்திரிகைகள் அடங்கும் தொகுதி
(1) இலங்கை நேசன், விஞ்ஞானவர்தினி, தினகரன்
(2) விஞ்ஞானவர்தினி, வீரசேகர், ஈழநாடு
(3) இலங்கை நேசன், இந்துசாதனம், சைவஉதயபானு
(4) சைவபோதினி, சைவஉதயபானு, தினகரன்
(5) இந்துசாதனம், உதயன், வலம்புரி

35) திருஞானசம்பந்தரைக் குறிக்கும் வேறு பெயர்கள்
(1) வாகீசன், வன்றொண்டர்
(2) சிவமணி, கோவை வேந்தன்
(3) சங்கரன், சிவகரன்
(4) தமிழாகரன், ஆளுடைய அரசு
(5) தமிழாகரன், புகழிவேந்தன்

36) சைவ சித்தாந்தப்படி உலக உற்பத்திக்கு முதற் காரணமாக அமைவது
(1) பதி (2) பசு (3) ஆணவம்
(4) கன்மம் (5) மாயை

37) திரிவர்க்கம் என்பதில் அடங்குபவை
(1) இருக்கு, யசுர், சாமம்
(2) ஆணவம், கன்மம், மாயை
(3) மனம், வாக்கு, காயம்
(4) சூரியன், சந்திரன், அக்கினி
(5) பதி, பசு, பாசம்


agaram.lk
Scanned with CamScanner

38) முச்சுடர்கள் அடங்கும் தொகுதி
(1) ஆகவன்னியம், காருகா பத்தியம், தக்கனாக்கியம்
(2) மனம், வாக்கு, காயம்
(3) சூரியன், சந்திரன், அக்கினி
(4) அந்தக்கரணம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம்
(5) சந்தி, ரோதயித்திரி, ஆரணி

39) சைவசித்தாந்த மரபில் ஆன்மா பக்குவப்படுவதற்கான மூன்று நிலைகள்
(1) சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்
(2) இருவினையொப்பு, மலபரிபாகம், சந்தினி பாதம்,
(3) இருவினையொப்பு, சஞ்சிதம், பிராரத்துவம்
(4) கர்மம், பக்தி, மலபரிபாகம்
(5) இருவினையொப்பு, பிராரத்துவம், பக்தி

40) வேதாந்த தத்துவங்களுக்கு கருவூலமென விளங்கும் பிரஸ்தான திரயம் என்பதில் அடங்குபவை
(1) அர்த்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம்
(2) உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை
(3) உபநிடதம், யோகவாசிஷ்டம், பிரமசூத்திரம்
(4) பகவத்கீதை, தர்ம சாஸ்திரம், உபநிடதம்
(5) ஆகமம், உபநிடதம், பகவத்கீதை

41) அடிமுடி தேடிய புராணக்கதையை சிந்திக்க வைக்கும் சிவனது வடிவம்
(1) தட்சணாமூர்த்தி
(2) பிக்ஷடன வடிவம்
(3) வைரவ வடிவம்
(4) திரிபுரந்தகர் வடிவம்
(5) இலிங்கோறபவர் வடிவம்

42) தென்னகத்தில் விஜயநகர நாயக்கர் காலத்தில் வைணவத்தின் கோட்பாடு ரீதியாக ஏற்பட்ட மாற்றம்
(1) அவதாரக் கோட்பாடு மக்கள் மத்தியில் பரவியமை
(2) சிவ - விஸ்ணு உதவி ஏற்பட்டமை
(3) வடகலை, தென்கலை வைணவப் பிரிவுகள் ஏற்பட்டமை
(4) திருமாலைத் தெய்வமாக ஏற்றமை
(5) கோபுரங்களில் வளர்ச்சி ஏற்பட்டமை

43) குருகுலத்தில் மாணவர் பெற்ற பயிற்சியில் சந்தியா வந்தனமும் ஒன்று. காலை, நண்பகல், மதியம் எனும் வேளையிலும் செய்யப்படும் இவ்வழிபாட்டுக்குரிய தெய்வம்
(1) சிவன் (2) காளி (3) பைரவர்
(4) சூரியன் (5) இந்திரன்

44) சைவ சித்தாந்தத்தில் சகல "நிஸ்களம் திருமேனி" எனப் போற்றப்படுவது
(1) நாதம் (2) விந்து (3) சதாசிவன்
(4) உருத்திரன் (5) மகேஸ்வரன்

45) "பல பிறவிகளில் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல்" என்பதைக் குறிக்கும் ஐந்தொழில்களில் ஒன்று
(1) படைத்தல் (2) காத்தல் (3) அழித்தல்
(4) அருளல் (5) மறைத்தல்



agaram.lk
Scanned with CamScanner

❖ 46 தொடக்கம் 50 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்குள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

46) பக்தியும் சாதனையும்
(1) பக்தி இறைவனை அடைவதற்குரிய சாதனமாகும்.
(2) இருக்குவேதம் இனக்குழு சார்ந்த பக்தி இலக்கியம் ஆகும்.
(3) இதிகாசங்கள் மனிதனின் ஒழுகலாறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பன.
(4) புராணங்கள் நடத்தைகளை நெறிகளாக கற்பிப்பன.
(5) தேவாரமும் இதிகாசமும் பக்திக்கு சாதகமாக உள்ளன.

47) ஆகம சித்பசாத்திர நெறி சாராது வழிபடும் தெய்வங்களின் பரத்துவம் பற்றிய கருத்தியல்
(1) நாட்டுப்புற மக்கள் தாம் வழிபடும் தெங்வங்கள் பல நன்மைகளைத் தருபவையென எண்ணல்
(2) அம்மக்கள் தாம் வழிபடும் தெய்வங்களைக் கண்கண்ட தெய்வங்களாகக் கருதி வழிபடுதல்
(3) அத்தெய்வங்கள் விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் உறைபவை, அருள்பாலிக்கும் தன்மை கொண்டவை எனக் கருதுதல்
(4) அத்தெய்வங்களின் இருப்பு பரத்துவம் பற்றிய கருத்துக்களும் அவை பெருந் தெய்வங்களுக்கு ஒப்பானவையெனக் கருதுதல்
(5) அம்மக்கள் அத்தெய்வங்கள் தமது சடங்குகளையும் நேர்த்திகளையும் ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் கொண்டவையெனக் கருதுதல்

48) காவடியும் பக்தியும்
(1) இறைவனை வழிபடுத்தற்குரிய முறைகளுள் காவடியும் ஒன்று.
(2) காவடி முருகனுக்குப் பிடித்த கடற்கலைகளுள் ஒன்று என்பர்.
(3) ஆன்மீக நாட்டத்தையும், பக்தி வைராக்கியத்தையும் வளர்க்கும் சாதனங்களுள் காவடியும் ஒன்று.
(4) காவடி வன் பக்தியையும் மென் பக்தியையும் வெளிப்படுத்துவது.
(5) பாற்காவடி மென் பக்திக்கும் பறவைக் காவடி வன் பக்திக்கும் உரியது.

49) அவத்தையும் ஆணவமும்
(1) வேதாந்தம் சிவாத்துமாவின் இன்பதுன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் அவத்தையே எனக் குறிப்பிடுகின்றது.
(2) சைவசித்தாந்தம் ஆன்மாவின் வினைப் பயன்களுக்கு அடிப்படையாக அமைவது ஆணவம் என்கின்றது.
(3) வேதாந்திகள் சிவாத்துமாக்களின் ஆன்ம விடுதலைக்குத் தடையாக இருப்பது அவத்தையே என்பர்.
(4) சித்தாந்திகள் ஆணவம் ஆன்மாவோடு அத்துவிதப்பட்டிருப்பது ஆன்மாவின் விடுதலைக்குத் தடை என்பர்.
(5) வேதாந்த, சித்தாந்த ரெகள்கைகளின் அடிப்படையில் அவத்தையும் ஆணவமும் பெரிதும் ஒத்திருக்கும்.

50) பதிகமும் திருவருட் பேறும்
(1) பத்துப் பாடல்களைக் கொண்டது பதிகமாகும்.
(2) காப்பிய இலக்கணங்களின் மிகச் சுருங்கிய பொருள் மரபு கொண்ட இலக்கிய வடிவமே பதிகமாகும்.
(3) பதிகம், பல்லவர் காலத்தில் எழுந்த பிரபந்த வடிவங்களுள் மிகவும் பக்தி பூர்வமான இலக்கிய வடிவமாகும்.
(4) பதிகம் இறைவன் திருவருட்பேற்றுக்கும் பக்தனை ஆற்றுப்படுத்தவல்லது.
(5) இறைவனைச் சிறந்த முறையில் போற்றிக் கூறுவன பதிகமாகும்.


agaram.lk
Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | இந்து சமயம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01) "பொது மக்களின் வாழ்வியல் முறைமைகளை வெளிப்படையாகக் கூறுவதோடு தனக்கென தனித்துவத்தையும் கொண்ட வேதம் அதர்வ வேதமாகும்"

அ) அதர்வ வேதம் என்பதன் பொருள்

ஆ) அதர்வ வேதத்தின் அமைப்பைச் சுருக்கமாக விளக்குக.

இ) இவ்வேதம் எடுத்துக்கூறும் பொது மக்கள் வாழ்வியல் சடங்குகளின் பிரதான அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

ஈ) அதர்வ வேதத்தின் தனித்துவத்தை எடுத்துக் கூறுக.

(2 + 3 + 10 + 5 = 20 புள்ளிகள்)

02) "இந்து தத்துவத்திற்கு முன்னோடியாக அமையும் தத்துவம் சாக்கிய தத்துவமாகும்"

அ) சாக்கியத்தின் காலத்தையும் அதன் பிரதான நூல்களையும் குறிப்பிடுக.

ஆ) சாக்கியம் ஏற்றுக் கொள்ளும் பிரமாணங்கள் யாவை?

இ) சாக்கியத் தத்துவக் கோட்பாட்டைச் சுருக்கமாக குறிப்பிடுக.

ஈ) சாக்கிய தத்துவக் கருத்துக்கள் பின்வந்த வேதாந்த, சித்தாந்த முன்னோடியாக அமைந்தவற்றைச் சுருக்கமாக விளக்குக.

(4 + 2 + 10 + 4 = 20 புள்ளிகள்)

03) சோழர் காலத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) திருமுறைகள்

ஆ) திருக்கோவில்

இ) அரச பணிகள்

ஈ) கலைகள்

(5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) "இந்துசமய வளர்ச்சியில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன"

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமய வளர்ச்சியின் பொருட்டு வெளிவந்த மூன்று பத்திரிகைகளின் பெயர்கள்

ஆ) பொதுசனத் தொடர்பு சாதனம் என்பதன் பொருளை விளக்குக. சாதனங்களின் பெயர்கள் 3 குறிப்பிடுக.

இ) அவற்றில் ஒன்றினைத் தெரிந்து சைவசமய வளர்ச்சியின் பொருட்டு ஆற்றிய பணியை விளக்குக.

(3 + 7 + 10 = 20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

05) சி.த.மு பசுபதிச் செட்டியார் அவர்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

06) பின்வரும் மூர்த்தங்களில் ஒன்றினைத் தெரிவு செய்து கலாவிமர்சனம் செய்க.

அ) நடராஜர் வடிவம்

ஆ) சோமஸ்கந்தன் வடிவம்

(20 புள்ளிகள்)

07) "சமயச் சடங்குகள் புனிதம் வாய்ந்தமையாகவும் பக்தியை வளர்க்கும் சாதனமாகவும் அமைகின்றன" அவற்றுள் விரதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

அ) விரதம் என்பதன் பொருளை வரவிலக்கணம் செய்க.

ஆ) சிவ விரதங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

இ) நீர் குறிப்பிட்ட சிவ விரதம் ஒன்றினை அனுஷ்டிக்கும் முறையைக் குறிப்பிடுக.

ஈ) நீர் அனுஷ்டிக்கும் விரதம் ஒன்றின் மூலம் நீர் பெறும் அனுபவங்களைக் குறிப்பிடுக.

(2 + 4 + 10 + 4 = 20 புள்ளிகள்)

08) பின்வருவனவற்றுள் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ) நாததம்பிரான் வழிபாடு

ஆ) சைவசித்தாந்தம் கூறும் பதியின் இயல்பு

இ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் சமயப் பணிகள்

ஈ) காணாபதியம்

உ) தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள்

ஊ) ஆகமமும் கிரியையும்

(4 × 5 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

FWC

| இந்து சமயம் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

### இந்து சமயம் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 11) | 5 | 21) | 4 | 31) | 1 | 41) | 5 |
| 02) | 4 | 12) | 3 | 22) | 1 | 32) | 3 | 42) | 3 |
| 03) | 4 | 13) | 2 | 23) | 5 | 33) | 1 | 43) | 4 |
| 04) | 5 | 14) | 4 | 24) | 4 | 34) | 3 | 44) | 2 |
| 05) | 3 | 15) | 5 | 25) | 5 | 35) | 5 | 45) | 3 |
| 06) | 3 | 16) | 2 | 26) | 2 | 36) | 5 | 46) | 1 |
| 07) | 2 | 17) | 3 | 27) | 3 | 37) | 3 | 47) | 1 |
| 08) | 5 | 18) | 4 | 28) | 3 | 38) | 3 | 48) | 3 |
| 09) | 5 | 19) | 1 | 29) | 2 | 39) | 2 | 49) | 5 |
| 10) | 1 | 20) | 5 | 30) | 2 | 40) | 2 | 50) | 4 |

### இந்து சமயம் - II

#### பகுதி - I

agaram.lk

01) அ) அதர்வர், அங்கிரஸ் என்ற இருடிகள் பரம்பரையினரால் உருவாக்கப்பட்டமையினால் அதர்வ வேதம் எனப் பொருள்படும்.
மாந்திரிகத்துடன் தொடர்புடையதனால் அதர்வவேதம் எனப் பொருள் பெற்றது எனவும் கூறப்படும். (2 புள்ளி)

ஆ) திரயீவித்யாவும், அதர்வ வேதமும்
இருக்கு வேதத்தின் சில பகுதிகள் அதர்வ வேதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதர்வ வேதம் 20 காண்டங்களையும் 731 சூத்திரங்களையும் 6000 பாடல்களையும் கொண்டுள்ளது. (3 புள்ளி)

இ) பொது மக்களின் வாழ்க்கையுடன் தொடர்படைய சில சடங்குகளை எடுத்துக் கூறுவது பொது மக்களிடையே காணப்பட்ட பழக்க வழக்கங்களுக்குரிய மாந்திரிகத்தையே அதர்வ வேதம் கொண்டுள்ளது. அவை

* மக்களின் நோய் தீர்க்கும் மந்திரங்கள் - பேஷஜானி
* நீண்ட ஆயுளுக்கான மந்திரங்கள் - ஆயுஷ்ய சூத்தங்கள்
* நல்ல விளைச்சல்களையும், வர்த்தகத்தையும் பெருக்கும் மந்திரங்கள் பௌஸ்டிகானி அரசர்களின் நன்மை பற்றிக் கூறப்படுகிறது - இராஜகர்மானி
* பெண்கள் வாழ்வை செழிப்புற அமைக்கும் மந்திரங்கள் - ஸ்திரிகர்மானி
* விவாகம், மரணம் போன்ற காலங்களில் செயற்படும் கிரியைகளுக்குரிய மந்திரங்களையும் அதர்வ வேதம் கொண்டுள்ளது. (10 புள்ளி)

ஈ) மக்கள் மத்தியில் காணப்பட்ட வாழ்வியல் சடங்குகளை எடுத்துக் கூறுவது

* பிற்கால மரணக் கிரியை, திருமணக் கிரியை போன்றவற்றுக்கான மந்திரங்களைக் கொண்டது
* சித்த ஆயுள்வேதம் பற்றிக் கூறியமையால் பிற்கால ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்னோடியாக அமைந்தது.
* அறக்கருத்துக்களைக் கொண்டது.

உ+ம் :- 100 கைகளால் பெற்று 1000 கரங்களுக்குத் தானம் செய்ய வேண்டும்.



Scanned with CamScanner

* சகோதரத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.
* மன வேற்றுமைகளை நீக்குவதற்குரிய பாடல்களைக் கொண்டுள்ளமை
* இன்று உலக அமைதியின் பொருட்டும் பேசப்படும் சாந்தி, சமாதானம், அமை கருத்துக்களைப் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளமை.

02) அ) கபிலரால் தோற்றம் பெற்றது.
நூல்கள் :- சாங்கிய சூத்திரம்
சாங்கிய காரிகை

ஆ) காண்டல்
கருதல்
உரை

இ) சாங்கியம் என்பது பூரண அறிவு. அதன் கோட்பாடுகள் வருமாறு
- புருடன்
- பிரகிருதி
- முக்குணம்
- சாத்காரிகவாதம் அவற்றின் விளக்கம்.

ஈ) சாங்கிய தத்துவங்களான
1. பிரமாணம் (பிரதியட்சம், அனுமானம், ஆபத வாக்கியம்)
2. சத்காரிய வாதம்
3. புருடன்
4. பிரகிருதி - மாயை
5. முக்குணம்

முதலான கோட்பாடுகள் சைவ சித்தாந்தத்திற்கு முன்னோடியாகவும் பிரமாண வேதாந்தத்திற்கும் முதலானவை முன்னோடியாக அமைந்தன.

03) அ) திருமுறைகள்
* சோழர் காலத்தில் ராஜ ராஜ சோழனால் தொகுப்பிக்கப்பட்டது. தொகுத்தவர் நம் நம்பி
* தொகுப்பு முறையும் பன்னிரு திருமுறைகளின் ஆசிரியர்களும்
* சோழர் காலத்தில் வாழ்ந்த திருமுறைப் புலவர்களும் அவர்களது பாடல்களும்
* நம்பியாண்டார் நம்பி சேந்தனார் கருவூர்த்தேவர்
* திருமுறைகள் கோயில்களில் பாடப்படுதல்
* ஓதுவார் மரபுகள்
* கல்வெட்டுச் செய்திகள் திருமுறைகள் பாடுவதற்கான நிபந்தனைகள்

ஆ) திருக்கோயில்
* ஆகமம் சார்ந்த விதிகளுக்கு அமைந்த கட்டிடங்கள் உன்னத வளர்ச்சி கண்டன.
* சோழர்கால கோயில்களை நான்கு கட்டங்களாக வகுக்கலாம்.
* தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழேச்சரம், விஜயபாலய சோழேச்சர
* திருக்கோயில்களுக்கு மன்னர்கள் வழங்கிய தானங்கள்
* கோயில்களை ஓதுவார்கள் நியமித்தல் திருமுறைகள் ஓதுதல் தேவ ரிசபத்தினியாளர்கள், பன்ம கேஸ்வர சேவைகளும் ஆலயத்தில் இடம்பெற்றன.
* திருக்கோயில்களில் விழாக்களும், மன்னர்களின் முடிசூட்டு விழாக்களும் பட்டாபி
* திருக்கோவில்களில் சதுர்வேதி மங்கலம்
* திருக்கோயில்களில் சமூக சேவைகள். ஓதுவர் சாலைகள், வாக்கணிப்பு மண்டபம்
* இசை, நடன, நாட்டிய நுண்கலை வளர்ச்சிக்கும் உதவின.


agaram.lk
Scanned with CamScanner

இ) அரச பணிகள்

- ✱ சோழ மன்னர்களின் உறுதியான அரசியல்
- ✱ கடல் கடந்த வர்த்தகம், ஈட்டிய பொருளாதாரத்தின் செல்வங்கள் யாவும் கோயில்கள் கட்டவும் பொது மக்களின் நன்மைக்காகவும் வெளிவந்தன.
- ✱ இறைபக்தி, சிவபாத சேகரர், திருநீற்றுச்சோழன் என்ற பெயர்களை சூடியமை
- ✱ பிரமாண்டமான கோயில்களை கட்டி கலைகளை வளர்த்தனர்.
- ✱ வேதாகமங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் அரசர்களாக கடமையாற்றினர்.
- ✱ கோயில்களுக்கு நிலம், பொன் தானமாக வழங்கியமை
- ✱ அரசர்கள், தேவரடியார்கள், நியமித்து வதிவிட வசதி அமைத்தமை
- ✱ கோயில்கள் சமூக சேவை நிறுவனங்களாக விளங்கியமை (5 புள்ளி)

ஈ) படிமக் கலை

- ✱ படிமக் கலையின் உன்னத காலம் வார்ப்புக் கலையின் செல்வாக்கு
- ✱ வெங்கலச் சிலை வார்க்கும் கலைஞர் பெருமைகள்
- ✱ ஆகம விதிகளுக்கு அமைவான திருவுருவங்கள் நடராஜர் திருவுருவம், பிரதிமாலட்சணம்
- ✱ காரைக்கால் அம்மையார், பார்வதி, கண்ணகி வடிவங்கள்
- ✱ நாயன்மார் திருமேனிகள்
- ✱ இலங்கையிலும் பொலநறுவையிலும் சோழர்கால படிமக் கலையின் செல்வாக்கு (5 புள்ளி)

## பகுதி - II

04) அ) 1. இலங்கை நேசன் (1877)
2. சைவ உதயபானு (1880)
3. சைவ போதினி (1881)
4. விஞ்ஞான வர்த்தினி (1882)
5. இந்து சாதனம் (1899)

(3 புள்ளி)

ஆ) ✱ தகவல் தொடர்புகளுக்கென உருவாக்கப்பட்ட சாதனம். இவற்றின் மூலம் பலதரப்பட்ட மக்களுக்கும் தகவல்களையோ, கருத்துக்களையோ நோக்கங்களையோ அறிவிக்கும் முறைமை கருவி தகவல் தொடர்பு அல்லது பொதுசனத் தொடர்புசாதனம் எனப்படும். மனிதனது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத சாதனமாக அமைவது

✱ வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம், இறுவட்டு, ஒளிநாடா மின்வழி (7 புள்ளி)

இ) 1. தேசிய ஒருமைப்பாட்டிற்கு உழைத்தல்
2. உண்மைச் செய்திகளை வழங்கல்
3. செய்திகளின் தலைப்புக்களுக்கு தேர்ந்தெடுத்த சொற்களை வழங்கல்
4. சமூக நோக்கு
   பெண்ணடிமை, வரதட்சணை தீண்டாமை வலோத்காரம் முதலான சமூக சீர்கேடுகளை வெளிக் கொணர்தல்.
5. இனக்குழுக்களுக்கிடையில் அதிக முரண்பாட்டை தோற்றுவிக்கும் வகையில் செய்திகளை வெளியிடாதிருத்தல்
6. இயற்கைக் காட்சிகள் விழாக்கள் சிற்பங்கள் நாடகங்கள் இலக்கியம், ஓவியங்கள் கட்டடக்கலை முதலானவற்றைக் காட்சிப்படுத்தல், விமர்சித்தல்
7. வரட்சி, புயல், வெள்ளப் பெருக்கு முதலான இயற்கை அழிவுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

மேற்காட்டிய அடிப்படையில் தேர்ந்தெடுக்கும் தொடர்பாடல் ஒன்றினை எடுக்கப்படல் வேண்டும்.

உ+ம் :- பத்திரிகை


agaram.lk
Scanned with CamScanner

1. பத்திரகைகள் மேற்காட்டிய விடயங்களை பகுத்து வெளியிடுதல் உண்டு
செய்திகளாகவும் வெளியிடுதல் உண்டு.
2. சில பத்திரிகைகள் சமயத்தின் பொருட்டு வெளிவருகின்றன.
உ+ம் :- இந்து சாதனம் சைவ உதயபானு

சமய விடயங்கள்
விழாக்கள் சொற்பொழிவு, புராணபடனம், மகாநாடு, சமய சமத்துவம், கூத்து, ஆய்வு
கண்டனங்கள், பலன்கள், கட்டுரைகள், கண்டித்தல், உரிமை கோரல், படங்களுடன் வெளியிடல்.

05) சி. த. மு. பசுபதிச் செட்டியார்.

(i) காலமும் சூழ்நிலையும்

| | | | | |
|---|---|---|---|---|
| தாயார் பெயர் | - | வள்ளியம்மை | | |
| தந்தையார் பெயர் | - | க. முத்துக்குமாரச் செட்டியார் | | |
| தொழில் | - | வாணிபம் | | |
| பிறப்பு | - | 1856 ஆனி மாதம் 30 ஆம் திகதி | | |
| கல்வி | - | ஆரம்பக் கல்வி | - | வண்ணை சைவப்பிரசகாச வித்தியா |
| | | ஆங்கிலக் கல்வி | - | சைவ ஆங்கில வித்தியாசாலை யாழ் மத்திய கல்லூரி |
| | | உயர் கல்வி | - | கும்பகோணம் அரசினர் கல்லூரி |
| கல்வி மரபு | - | நாவலர் பரம்பரை | | |

நாவலர் நோக்கில் சைவத்தையும் அதன் வளர்ச்சிக்கு கருவியாகிய கல்வியை தன் இலட்சியமாகக் வாழ்ந்தமை.

(ii) பணிகள்
1. சைவபரிபாலனசபையின் உறுப்பினராக இருந்தமை
2. சைவபரிபாலன சபையின் பொருளாளராகக் கடமையாற்றியமை
3. யாழ்ப்பாண இந்துக் கல்லூரியினை ஆரம்பித்து நடத்தியமை
4. குருகுல வகுப்பை ஆரம்பித்து கலைத்திட்டத்தின் அடிப்படையில் நடத்தியமை
5. குருகுல வகுப்பை நடத்த விடுதிகள் அமைத்தமை
6. திருக்கேதீச்சரப் பணிகள்
   1. பழைய சிவலிங்கம் கண்டுபிடித்தல்
   2. புதிய ஆலயம் அமைத்தல்
7. வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத் திருப்பணிக்கு மானியம் அளித்தல்

(iii) பொதுப் பணிகள்
1. விக்டோரியா வாசிகசாலை திறத்தல் அதன் பொருளாளராகக் கடமையாற்றல்
2. இந்து வாலிபர் சங்கத்தை உருவாக்கல்
3. இந்து சாதனம் எனும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்துதல்
4. துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமை
5. தேவாரபாராயண வகுப்புக்களை ஆற்றுப்படுத்தியமை

06) அ) (i) நடராஜர் வடிவம்
அறிமுகம்
புராணக் கதைகள் / தொண்மை

(ii) இலட்சண விதி
* அளவைப் பிரமாணம்
* பங்கம்
* ஸ்தாரணம்
* அலங்காரம்
* ஆயுதங்கள்
* முத்திரைகள்
* குணம்



agaram.lk
Scanned with CamScanner

(iii) தத்துவம்

1. ஐந்தொழில் தத்துவம்
   - ✶ படைத்தல் - வலக்கை ஏந்தியமை
   - ✶ காத்தல் - அபயகரம்
   - ✶ அழித்தல் - தீயேந்திய கரம்
   - ✶ மறைத்தல் - ஊன்றிய திருவடி
   - ✶ அருளல் - தூக்கிய திருவடி

2. நடராஜ வடிவம் தூல சூக்கும பஞ்சாட்சரங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன.

   ந - திருவடி
   ம - திருவயிறு
   சி - திருத்தோள்
   வா - திருமுகம்
   ய - திருமுடி

(iv) சமய சமூக முக்கியத்துவம்

1. சைவ சித்தாந்தம் கோட்பாட்டை நடராஜ மூர்த்தம் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.
2. சிவன்கோவில்களில் நடராஜ வடிவம் இடம்பெறும்
3. சைவ விக்கிரகக் கலையுடன் தொடர்புடையது
4. நடராஜ மூர்த்தம் மார்கழி திருவாதிரையுடன் தொடர்படையது.
5. வழிபாடுகள் சிவாலயங்களில் திருவாதிரை திருவெம்பாவை நாட்களில் சிறப்பான வழிபாடு சிதம்பரத்தில் விசேடமான வழிபாடு

ஆ) (i) சோமஸ்கந்தம்

சிவ மூர்த்தம் 64 சிறப்பு 25. இதில் சோமஸ்கந்த மூர்த்தமும் ஒன்று. சிவன் உமையுடனும் கந்தனுடனும் வீற்றிருக்கும் மூர்த்தம் சோமஸ்கந்த வடிவமாகும்.

ஸ + உமா + ஸ்கந்த வடிவம்

(ii) தோற்றம்

புராணக்கதை / கொண்மம்

(iii) இலட்சண விதி

- ✶ இறைவன் முக்கண்ணனாக காட்சியளிப்பார்
- ✶ அமர்ந்திருக்கும் ஆசனம் பத்ரபீடம்
- ✶ புலித்தோலுடையை அணிந்தவன்
- ✶ வலது கை - பரசு
- ✶ இடது கை - மான்
- ✶ மற்றைய வலது கை - அபயகரம்
- ✶ நான்காவது கை - வரதகரம்
- ✶ வலது கை - மகர குண்டலம், சிம்ஹகுண்டலம்
- ✶ இடது கை - பத்ர குண்டலம்
- ✶ தலை - சடா மகுடம், ஊமத்த மலர், பிறை என்பன சடையிற் சூட்டப்பட்டுள்ளன.
- ✶ மார்பில் - உபவீதம்
- ✶ இடுப்பில் - உத்தரியம் கட்டப்பட்டுள்ளது.

உமையின்

- ✶ வலது கரம் - தாமரை
- ✶ இடது கரம் - ஆசனத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும்
- ✶ இடது கால் - தொங்கவிடப்படும்
- ✶ வலது கை - உற்பலத்தை தாங்கும்
- ✶ இடது கை - வரதகரம்

agaram.lk



Scanned with CamScanner

கந்தன்

* உமைக்கும் சிவனுக்கும் நடுவில் அமையும்
* ஒரு முகம்
* இரு கரங்கள்
* இரு கண்கள்
* கரண்ட மகுடம்
* மகர குண்டலம்
* கைகளில் காப்பு
* வலது கை - தாமரை

(iv) தத்துவம்

உண்மை - அறிவு - இன்பம் (ஸத், சித், ஆனந்தம்) என்ற மூன்று சோமஸ்கந்த மூர்த்தத்தின் தத்துவம்

சிவன் - ஸத்

உமை - சித்

முருகன் - ஆனந்தம்

சிவன் இச்சா கிரியா சக்தியையும் ஞானா சக்தியாகிய கந்தனையும் செயற்படுத்தி கிருத்தியங்களைச் செய்கிறார்.

(v) சமய சமூக முக்கியத்துவம்

* தேர்த் திருவிழாவின் போது திருவுலாக் கொண்டு வருதல்

07) அ) "விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை வழிபடுதல்

ஆ) சிவராத்திரி

திருவாதிரை

பிரதோசம்

கேதாரகௌரி விரதம்

இ) காலம், விரத நியதி என்பன குறிப்பிட்டு விளக்குதல்

உ+ம் :- மகாசிவராத்திரி விரதம்

நியதி

1. விரத தினத்திற்கு முதல் நாள் ஒருவேளை உணவு உண்ணல்
2. விரத தினம் உபவாசம் இருத்தல்
3. சிவாலய தரிசனம் செய்தல்
4. நான்கு சாமப் பூசை காணுதல்
5. சிவ தோத்திரம் பாடுதலும் கேட்டலும்
6. பஞ்சாட்சர மந்திரம் ஜெபித்தல்
7. இரவு முழுவதும் நித்திரை விழித்தல் இயலாதோர் இலிங்கோற்பவ கா விழித்திருத்தல்.
8. மறுநாட் காலை விரதம் முடித்து சூரிய உதயத்திற்கு முன் பாரணை செய்தல்

ஈ) 1. ஒழுக்க விதிகள்

2. மனதில் அமைதி, புனிதம் குடி கொள்ளல்
3. இறைவனுக்கு தன் பக்தியை அர்ப்பணித்தல்
4. அவனுடன் உறவு கொள்ள முயற்சித்தல்
5. புனிதத் தன்மை
6. அக புற தூய்மை
7. இறைவனுடன் ஒன்றுபடல்



agaram.lk
Scanned with CamScanner

(18) அ) நாகதம்பிரான் வழிபாடு

தோற்றம்

1. தொன்மம் பற்றிய கருத்தியல்
   அ) ஆதிஷேசன்
   ஆ) அனந்தன்
   இ) பலராமன் சேஷநாசனின் அவதாரம்
2. நாட்டார் மரபியல்
   அ) ஐந்து பெண்களுடன் ஒரு பாம்பு உடன் பிறத்தல்
   மூன்று பெண்களுடன் ஒரு பாம்பு பிறத்தல்

வரலாறு

* சிந்துவெளி முத்திரைகளில் பாம்பின் வடிவம்
* வேதங்களில் பாம்பு அஹி என அழைக்கப்படும்
* யசுர் வேதம் கரு பாஞ்சாலத்தில் தொடுக்கப்பட்டது. பாஞ்சாலத்தின் தலைநகரம் அஹிச்சந்திரன். அப்பகுதி மக்களின் குலதெய்வம் ஆதிநாகம்
* கிருஹய சூத்திரத்தில் மூன்று உலகிற்கும் நான்கு திசைகளுக்கும் தெய்வமாக நாகர்கள் குறிப்பிடப்படுகின்றனர்
* நித்தேஸ் என்னும் பௌத்த நூல் நாக வழிபாடு பற்றிக் குறிப்பிடும்
* கணிஷ்கருடை பட்டயங்களில் நாக வடிவங்கள் பொறிக்கப்பட்டன
* நாகம் வைதீக தெய்வங்களின் வாகனமாகவும் அணிகலமாகவும் விளங்குகின்றது.
* சிற்பம், ஓவியம், படிமம் முதலானவற்றின் பொருள் மரமாகவும் விளங்குகின்றது.

ஆ) சைவசித்தாந்தம் கூறும் பதியின் இயல்பு

* இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் - அநாதியானவன்
* இறைவன் அனைத்து உயிர்களுக்கும் உலகங்களுக்கும் தலைவன்
* பதியே மேலான பொருள்
* ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவர்
* தத்துவங்களைக் கடந்தவர்
* தத்துவங்களோடு பிரிந்தும் பிரிப்பின்றியும் நிற்பவர்
  * சிறப்பியல்பு - சொரூப லட்சணம்
  * பொதுவியல்பு - தடத்த லட்சணம்

இறைவன் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய திருவருள் திரு மேனியாகக் கொண்டு எழுந்து அருளுவார். இது தடத்த நிலை. இந்நிலையில் உருவம், குணம், குறி, செயலும் உடைய மூர்த்தியாக இருப்பார். கருவி காரணங்களுக்கு அப்பாற்பட்டு நிற்பது சொருபலட்சணம். பதியின் இயல்பு ஞானமும் ஆனந்தமும் ஆகும். இதனை சத்சித் ஆனந்தம் என்பர். இம் மூன்றிலும் இறைவனது எண்குணம் அடங்கும். என்றுமுள்ள அக்காலத்தும் ஒரே தன்மையான பொருள் சத் தன்வயத்தனாதல் இதில் அடங்கும்.

சித்தில் தூய உடம்பினராதல், முற்றுணர்தல், இயற்கை உணர்வினனாதல், இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குபவர், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை எனும் ஆறு குணகம் அடங்கும்.

ஆனந்தத்தில், வரம்பில் இன்பமுடைமை அடங்கும். இவ்வாறான எண் குணங்கள் இறைவனின் இயல்பைக் கூறுகின்றன. இறைவன் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனியைக் கொண்டு விளங்குகிறார்.

agaram.lk



Scanned with CamScanner

இ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் சமயப் பணிகள்

பாண்டிய நாட்டு மன்னான கூன் பாண்டியன் சமயத்தைத் தழுவினான் அவனைப் பின்பற்றிச் சமண சமயத்தைத் தழுவினர். அதனால் பாண்டிய மன்னன் மங்கையற்கரசியாரும் அமைச்சரான குலச்சிறையாரும் வருந்தினர். ஞானசம்பந்தருக் வெளிப்படுத்தினர். எனவே அவர்கள் இருவரும் வரவேற்க ஞானசம்பந்தர் பாண்டிய வந்து திருமடத்தில் தங்கி இருந்தார். அவரது வருகையை அறிந்த சமணர்கள் ம வைத்தனர். அத்தீயில் நின்றும் தப்பிய ஞானசம்பந்தர் அத்தகைய கொடியவர் நாட்டை ஆளும் வேந்தனின் குற்றம் தான் கொடியது எனக்கூறி "செய்யவே பதிகத்தைப் பாடினார். பாண்டிய அரசனுக்கு வெப்பு நோய் ஏற்பட்டது. சமணர்கள் வெப்பு நோய் நீக்கப் பலவாறு முயன்று பயனின்றி நின்றனர். பாண்டிய மன்னன் த உணர்ந்தான். ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு......" என்ற பதிகத்தைப் பாடி மன்ன நோயை நீக்கினார். பாண்டிமா தேவியின் நற்பண்புகளைக் கண்டு வியந்த "மங்கையற்கரசி வளவர் கோன் பாவை..." மற்றும் "மானிநேர் விழி......" என்ற ப பாடி மங்கையற்கரசியாரின் பணிகளைப் போற்றினார். அவ்வாறு பாண்டிய மன்ன சைவசமயத்தைத் தழுவியமையால் பாண்டிய நாடு முழுவதும் மீண்டும் சைவசமயத் திருஞானசம்பந்தரே வழிவகுத்தார்.

"வேந்தனும் ஓங்குக......" எனும் பதிகத்தைப் பாடினார். பாண்டியனின் கூன் இதனால் குன்றிய சமயம் வளர்ச்சி பெற்றது.

ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தை விளக்க ஞானசம்பந்தர் ஆலயந் யாத்திரை மேற்கொண்டார். வேதாரணியத்தில் மறைகளால் பூட்டப்பட்டு அடியவ முடியாது இருந்த ஆலயத்தின் கதவைத் திறக்க "சதுரம்மறை......" எனும் பாடினார்.

அனல்வாதம், புனல்வாதம் எனும் வாதங்கள் செய்து சைவசமயம் மெய் வாதிட்டார்.

agaram.lk

ஈ) பிள்ளையார் வழிபாடு (காணாபத்யம்)

| | | |
|---|---|---|
| தோற்றம் | - | யசுர் வேதம், ஹேரம்ப உபநிடதம், சிவபுராணம், மச்ச புராணம், நூலிலும் விநாயகர் புராணத்திலும் விநாயகரின் தோற்றம் விநா பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. |
| | | பிள்ளையார் பற்றிய செய்திகள் |
| கிரியை முறை | - | ஆகம சிற்ப சாத்திர நெறி சார்ந்த வழிபாட்டு முறை ஆகம நெறி சாராத வழிபாட்டு முறை |
| விரதங்கள் | - | விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி, சுக்கிரவாரம் |
| தோத்திரம் | - | கணேச பஞ்ச ரத்தினம் |
| | | விநாயகர் அகவல் |
| | | விநாயகர் கவசம் |
| | | பிள்ளையார் மும்மணிக் கோவை |
| தத்துவம் | - | பிரணவருபர் |
| | | ஐந்தொழில் தத்துவம் |

சமய சமூக முக்கியத்துவம்



Scanned with CamScanner

உ) தஞ்சைப் பெருவுடையார் ஆலய ஓவியங்கள்

ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் ஓவியக்கலையின் சிறப்பையும் வனப்பையும் காணலாம். கருவறைச் சுவரில் உள்ள ஓவியங்கள் சிறப்பானவை. தஞ்சைப் பெருங்கோவிலின் ஓவியங்களின் முற்காலத்து ஓவியக்கலைப் பாணியையும் பிற்கால ஓவியக்கலை நோக்கலாம்.

உ+ம் :-

- யோகதட்சணாமூர்த்தி
  சிவபெருமான் மான் தோலில் யோகத்தில் அமர்ந்திருக்கும் காட்சி
- திருக்கைலாய காட்சி
  சுந்தரரும் சேரமான் பெருமாலும் கைலை செல்லும் காட்சி
- தடுத்தாட் கொண்ட வரலாறு
  சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொண்ட வரலாறு
- தில்லைத் திருக்காட்சி
  தில்லை நடராஜ உருவம் அதனை அரச கோலத்துடன் ஒருவன் வழிபடுவது போன்ற காட்சி

இதைவிட இராஜராஜன், கருவூர்த்தேவர், திரிபுராந்தகர், நடனமாதர், மங்கையரின் மான்புமிகு ஓவியம், அன்றாட வாழ்க்கை ஓவியம் என்பவாகும்.

ஊ) ஆகமமும் கிரியையும்

இந்துக்களின் கிரயை மரபுகளை வெளிப்படுத்துவதில் ஆகமம் முக்கியம் பெறுகின்றன. அக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூல் பத்ததிகள் ஆகும். இக்கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருமுறையையும் மையமாகக் கொண்டவை.

கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள் அவற்றை ஆற்றும் விதிகள் பூசையின் அங்கங்கள் மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள் என்பன பற்றிக் கூறுகின்றன.

கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷனம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவில் நோக்குவர்.

கர்ஷனம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பயன்படுத்துவது
பிரதிட்டை - ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை செய்வது
உற்சவம் - ஆலயத்தில் வருடம் ஒருமுறை நிகழும் திருவிழா
பிராயச்சித்தம் - ஆலயக் கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

கோயிற் கிரியைகளை நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிக கிரியை எனவும் வகைப்படுத்தவர்.

நித்திய கிரியை - தினமும் நடைபெறுவது (3 வேளைப் பூஜை)
நைமித்திய கிரரயை - விசேட நாட்களில் ஆற்றப்படும் கிரியை (சுக்கிர, சோம வாரம்)
காமிக கிரியை - பயனை அவாவிச் செய்யும் கிரியை

மகோற்சவத்தின் போது நடைபெறுகின்ற கிரியைகளும் சைவ சித்தாந்தம் கூறுகின்ற ஐந்தொழில் தத்துவத்துடன் தொடர்புபடுகின்றன.

- ✶ கொடியேற்றம் - படைத்தல்
- ✶ வாகனத் திருவிழா - காத்தல்
- ✶ தேர்த்திருவிழா - அழித்தல்
- ✶ மௌனோற்சவம் - மறைத்தல்
- ✶ தீர்த்தம் - அருளல்

மகோற்சவத்தின் போது தினமும் சுவாமீ வெளிவிதி வலம் வருதல் நடைபெறும். இதன் மூலம் இறைவன் ஆன்மாக்களுக்கு சாம்பவ தீட்சையை அளிப்பதாக கூறப்படும்.

(4 × 5 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner